வித்யாதனம்

823

TAMIL TREASURE CHEST

தொகுதி V ஜனவரி௴ 1942௵ பகுதி 10

தமிழ்நாடு ஆவணக் காப்பக
008



ஹாவா மஹால்
ஜெய்ப்பூர்.

பொருளடக்கம்

பக்கம்

1. நவ வருட நற்செய்தி 1
2. சர்வ தேசப் பொம்மைகள் 2
3. நான் கண்ட உலகம் 4
4. கெனில் வோர்த் 6
5. கொலை! கொலை!! 10
6. ரபீந்திரநாத் தகோர் 12

பக்கம்

7. துப்பறியும் நிபுணன் 15
8. காலத்தின் விசேஷம் 18
9. வெள்ளைக் கொக்கு 19
10. சவுக்கு மரக் கதை 21
11. நான் செய்த நவ வருடத் தீர்மானங்கள் 23
12. இன்னோராண்டு மாயிற்றே 24

(o)

பத்திரிகையின் சந்தா விபரம்.

பிரதி ஒன்றுக்கு ... அணா 1
வருஷ சந்தா ... ரூ. 1—0—0

REV. T. A. FENN,
London Mission Church,
Coimbatore.

உப பத்திராதிபர் Jane Fenn

விளம்பரம்

"வித்யாதனம்" உங்களுக்கு அனுப்பப்படும்போது மேல் விலாசத்தில் எந்த வருஷம் எந்த மாதத்தோடு உங்கள் சந்தா முடிவடைகின்றதென்பதைக் குறிப்பிட்டிருக்கின்றோம். (உ-ம்) 2-41 என்றால் 1941௵ 2ம் மாதம் என்பது பொருள். சந்தா முடிவடையுமுன் "வித்யாதனம்" அனுப்ப வேண்டாம் என்று பத்திராதிபருக்கு தெரியப்படுத்தா விட்டால் அடுத்த மாதப் பத்திரிகை வி.பி. தபால் (V.P.P.) மூலமாய் அனுப்பப்படும் என்று இதனால் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். ஏற்கன[illegible] மணி யார்டர் (M.O.) மூலமாய்ப் பணம் அனுப்பினால் தபால் செலவு குறையும். பத்திரி
ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் அனுப்ப வேண்டு

T. A. FENN,
London Mission C
Coimbatore.

வித்யாதனம்

VIDYADHANAM

TAMIL TREASURE CHEST

தொகுதி V ஜனவரி௴ 1942௵ பகுதி 10

நவ வருட நற்செய்தி

நண்பர் அனைவருக்கும் நம் நவ வருட வாழ்த்து அனுப்புகின்றோம். இவ்வாண்டு உங்களுக்கு நவ கனிதரும் நல்லாண்டாவதாக! நவமான ஆனந்தம் ஈயும் நவ வருடமாவதாக!

நம் வீட்டிற்கு அருகில் அநேக புளிய மரங்களுள. சில மாதங்களுக்கு முன் மரங்கள் நிறையப் பூக்கள் இருந்தன. அப்போது ஒரு சிறுவன் அதைக் கண்டு ஆச்சரியப் பட்டு "இந்த ஆண்டில் இம் மரங்களில் ஏராளமான புளியம் பழம் கிடைக்கும்" என்றனன். அதைக் கேட்ட அவன் நண்பன் அவனைப் பார்த்து,

"தம்பி! தம் தம் வாக்கை நிறை வேற்றுமானால் அம் மரங்கள் மிகுந்த பலனைத் தரலாம்" என்றனன்.

"வாக்கை நிறை வேற்றுவது என்றால் என்ன?" என்று அப் பையன் கேட்டனன். அதற்கு அவன் நண்பன் சொன்னதாவது:—

"மரங்களின் பூக்களே அவைகளின் வாக்கு" இப் பூக்களெல்லாம் காய்க்குமானால் அவ் வாக்கு நிறை வேறினது என்று சொல்லலாம். மேலும காய்களெல்லாம் கனிகளாக வேண்டும் பூக்கள் உதிரும். காய்கள் உலரும். கடைசியில் புளியம் பழங்களின் தொகை பூக்களின் தொகையளவு இருக்காது."

பிரியமான பிள்ளைகளே! உங்களில் எத்தனை பேர் இம் மரங்களைப் போன்றவர்கள். உங்கள் முகங்களில் எத்தனையோ வாக்குகள் ஜொலிக்கின்றன. இந்தப் புது ஆண்டில் பிரவேசிக்கும் போது நீங்கள் செய்யும் புது தீர் மானங்களெல்லாம் புஷ்பங்களே. அத் தீர்மானங்களை நிறைவேற்றும்போதுதான் நீங்கள் கனி கொடுப்பீர்கள். ஆகையால் இந்த ஆண்டில் இயேசு கிறிஸ்துவின் சகாயத்தையும் சக்தியையும் நம்பித் தீர்மானம் செய்யுங்கள். மிகுந்த கனிகளைக் கொடுப்பீர்கள். உங்களுடைய நற்கிரியைகளே கனிகள்.

புளிய மரங்களைப் போலவே உங்களிடத்தில் அநேக பூக்களுள. கனி கொடுக்கும் சக்தியுண்டு. கடவுளின் கிருபையைத் தேடுங்கள். அவர் உதவி செய்வார். உங்கள் மூலமாய் உலகத்துக்கு ஆவியின் கனிகள் கிடைக்கும். நீங்கள் புஷ்பங்கள். உங்கள் நற் கிரியைகள் நவ கனிகள். இதுவே எமது நவ வருட நற்செய்தி.

தேவை:—புதிய வருடங்களல்ல. 1942 அல்ல தேவை—புதிய கனிகளும் புதிய பிள்ளைகளே!

—T. A. Fenn.

ஸர்வ தேசப் பொம்மைகள்

Verna Grisier McCully

பிள்ளைகள் விரும்பும் ஈவுகளுள் பொம்மை விசேஷித்தது. இப்பொம்மைகளையும் பல தேசத்தார் உடுத்தும் உடைகள் உடுத்திக் கொடுத்தால் அதைப் பெற்றுக் கொள்ளும் பிள்ளைக்கு அந்நிய தேசத்தாரின் பேரில் பிரீதியும், அவர்களைப் பற்றிய அறிவும் விருத்தியாகும். பிள்ளைக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாகும். படத்தில் பார்க்கிற அத்தனை பொம்மைகளையும் ஒரே நாளில் ஒரு பிள்ளைக்குக் கொடுக்க முடியா விட்டாலும் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுக்கப் பிரயாசப்படுவது நல்லது. அந்தந்த தேசத்திற் குரிய வீடுகள், ஜாமான்கள், மரங்கள் முதலியவைகளையும் பையன்கள் கைகளினால் செய்து கொடுக்கலாம்.

எல்லா பொம்மைகளும் கூடிய மட்டும் ஒரே உயர முள்ளவைகளா யிருத்த லவசியம். சுமார் ஓரடி உயர மிருந்தால் போதும். யுத்த காலத்தில் பொம்மை விலை யதிகம். துணி பொம்மை செய்யலாம். முகத்துக்குச் சாயம் பூசி தேச வர்ணங் காட்டலாம். பிறகு கண், மூக்கு, வாய் வரையலாம். தேசிய உடை தைக்க மாதிரிப் படம் தேவை. படத்தில் காட்டிய படி தைக்கலாம்.


Mexico
India
Gecho
Slovakia
Africa
South America
Japan

மெக்சிக்கோ இந்தியா செக்கோஸ்லோவேக்கியா ஆப்ரிக்கா தென் அமெரிக்கா ஜப்பான்


FOLD
FOLD
a
a
b
b
1
2
c
c
d
c
3
f
f
4
5
S
6
g
7

உடை மாதிரி படம்

1. கால்ச் சட்டை மாதிரி.
2. சீனாப் பெண் சட்டை மாதிரி.
3. ஜப்பான் கிம்மோனா உடை மாதிரி.
4. செக்கோஸ்லோவேக்கியா பெண் மேலுடை மாதிரி.
5. பிலிப்பைன் மேலுடை மாதிரி.
6. செக்கோஸ் லோவேக்கியா பாத ரட்சை மாதிரி
7. சீனர் பாத ரட்சை மாதிரி.


Philippines
China
Korea

பிலிப்பைன் சீனா கொரியா

இந்த பொம்மைகளை அங்கந்த தேசக் காட்சிகளை யமைத்து அங்கங்கே வைத்தால் அழகாயிருக்கும். இந்தக் காட்சிகளைப் படத்தில் வெட்டி ஒட்டலாம் அல்லது வரையலாம். சீனா தேசக் காட்சியைப் படத்தில் காணலாம். இப்படிச் செய்வதினால் பிள்ளைகளுக்கு அந்நிய நாட்டைப் பற்றிய அறிவும் அன்பும் அநுதாபமும் உண்டாகும்.

———(o)———



இப் படத்தை வரைந்து வர்ணம் பூசப் பழகுங்கள்.

நான் கண்ட உலகம்

Thiaharaj Parker.

உயர் தருக்களும், பசுஞ் செடி கொடிகளும் அடர்ந்திருக்கும் ஒரு வனம் வழியே, வலக் கையில் ஒரு புட்டியைப் பிடித்த வண்ணம் அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டு வேகமாய் நடந்துகொண்டிருந்தேன். எங்கே சென்று கொண்டிருந்தேன் என எனக்கே தெரியாது. கால்களோ ஒன்றோ டொன்று பின்னின; நெஞ்சு துடி துடித்தது; முகமும் தேகமும் வியர்த்தன.

நேரமோ, களங்க மற்ற விசும்பில் செம்செக்கர் படிந்த அந்தி வேளை. "மாம்ச உடலெடுத் துழலும் மாந்தனே, மானிட வாழ்வு மாய மென நின்னுயிரை மாய்க்கத் துணிந்தனையோ? என்னே, அக்கொடுங் காட்சியை நான் பார்த்தல் கூடா" தென சொல்லியவனாய் மறைந்தான் ஆதவன். "ஆறறிவுப் படைத்த அன்பனே, பிறவியின் பயன் இன்பமோ. துன்பமோ அனுபவித்தே தீர வேண்டுமாதலின் கலங்கேல்; வீணும் அவலம். வீடு செல்க" வென எனைத் தேற்றுவான் பொருட்டுத் தன் தண் கிரணங்களோடு பிரகாசிக்க ஆரம்பித்தான் சந்திரன். "ஏன் ஐயா இந் நர ஜென்மம் எடுத்தனை? காக்கையினுங் கேடு கெட்ட யாக்கை யல்லோ இது நாம் சுகிக்கும் இன்பத்தின் காற் பங்கு கூட உன்னால் அனுபவிக்க முடியாதே" என்றவாறு மின்னி மின்னி என்னை பழிக்க ஆரம்பித்தன வானத் தாரகைகள். இத் தருணத்தில் பட்சியினங்க ளெல்லாம் கூட்டங் கூட்டமாய் களிப்பா யாடிப் பாடித் தம் தம் புகலிடம் அடைந்துக் கொண்டிருந்தன. தென்றற் பகவான் ஜிலு ஜிலு வென வீசிக் கொண்டிருந்தனன். இயற்கையின் மாட்சி மிக ரமணீகரமாயிருந்தது. இப் பட்சி யினங்களின் காட்சியும், இயற்கையின் காட்சியும் விளக்கா நின்றன.

ஆஹா, கையிலகப் பட்டால் சட்டினி யாகி விடும் கேவலம் பகுத் தறிவற்ற இப் பறவைக் கூட்டங்களும், காலையில் அலர்ந்து மாலையில் மாளும் இப் புஷ்ப வினங்களும் அனுபவிக்கும் பாக்கியம் கூட நாம் அநுபவிக்கப் பெற்றோ மில்லையே என என்னையும் என்னை சிருட்டித்த பராபரனையும் நொந்துகொண்டே நடந்துக் கொண்டிருந்தேன்.

* * * *

ஆம் நான் மிகவும் துர்ப்பாக்கியனே. என் வாழ்க்கை மாகேவலமான வாழ்க்கை. என் நாடோடிய ஜீவியத்தில் எடுத்த காரியங்களைத்திலும் முதல் தடவை ஒரு போதும் சித்தி பெற்றதில்லை. பாலிய பருவம் முதல் இவ் வாலிய பிராயம் வரை சஞ்சலமே என் நண்பன் பாலர் வகுப்பு முதல் பீ. ஏ. வரை ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டிரண்டு வருஷங்கள் கயாவாகிக் கொண்டிருந்தேன். எஸ். எஸ். எல். ஸி. யில் முதல் வருடம் (unselected ஆகி) அனுப்பப்படாமல் பின்னர் இரு முறை கவர்ண்மெண்ட் பரீட்சையில் கோட் அடித்து மூன்றும் தவணையில் எப்படியோ பாஸ்பண்ணி விட்டேன். வீட்டிலோ, கேள்வி கேட்பாரும், என்னை மேய்ப்பாரும் இல்லை. ஏனெனில் இவர் செல்லப் பிள்ளை, எவர்? கதை எழுதிய இவர். சரி, மேலே இண்டர் மீடியெட் யூனிவர் ஸிட்டி பரீட்சையும் எழுதியாயிற்று. (Results-ம்) அதின் பலனும் மே மாதம் வெளியாயிற்று. பத்திரிகையில் என் நம்பரை மிக ஆத்திரமாய் வெகு பத்திரமாய் தேடினேன். யூனிவர் ஸிட்டியார் (press) அச்சுக்கு என்

நம்பரை கொடுக்க மறந்தார்களோ என்னமோ, அல்லது press காரர்கள் தான் (print) பண்ண அச்சடிக்க மறந்தார்களோ என்னமோ என் நம்பரை மூன்று பாகத்திலும் காணோம். ‘ஐயோடா’ எனச் சொல்லி, கொட்டாவி விட்டு, அந்த யூனிவர்ஸிட்டி பரீட்சைக்காக கஷ்டமென்றும் நஷ்டமென்றும், துன்பமென்றும் இன்பமென்றும் ஊணென்றும் வீணென்றும், தூக்கமென்றும் ஆக்கமென்றும் பாராது படித்தேனே ; அப்படியும் எனக்கு குண்டு போட்டானே ; அந்த யூனிவர்ஸிட்டியார் நாசமாய்ப் போக என மண்ணை வாரித் தூவி விட்டு வீடு சேர்ந்தேன் பின் நான்கு மாதம் (furlough) வெளியிற் சென்று செப்டெம்பரில் எழுதி பாஸ் பண்ணி விட்டேன். பீ. ஏ. யூனிவர்ஸிடிப் பரீட்சையிலும் இதே கதைதான்.

பின்னர் உலக வாழ்க்கையில் புகுந்தேன். நான் உற்ற கஷ்டங்களை எழுதி முடியா. வேலையில்லாமல் அதிகக் கஷ்டப்பட்டேன். இவ்வேளையில் என் பேற்றோரை இழந்தேன். ; என் சுற்றத்தாரால் புறக்கணிக்கப் பட்டேன் ; மற்றும் சற்றாராகிய என் நண்பர்களால் அவமதிக்கப்பட்டேன், கதியற்ற வனானேன். “Troubles never come single” என்ற ஆன்றோருரைப்படி கஷ்டங்களுக்கு மேல் கஷ்டம் அனுபவித்தேன். ஆதலின் உய்ய உய்வற்று, களவாடப் போய், போன விடத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிபட்டு, ஜெயிலுக்குப் போய், மொட்டை யடிக்கப்பட்டு வெளியே வந்தேன்.

உலகத்தை பார்க்க எனக்கு வெட்கமா யிருந்தது. என் ஜீவியத்தை நினைந்து கண்ணீர் சொரிந்தேன். இது தான் நான் கண்ட உலகம். இனி யாது செய்வதெனச் சிந்தித்தேன். ஒரு யோசனை தோன்றிற்று. தலையில் உறுமால் கட்டிக் கொண்டு வீடு சேர்ந்தேன். என் பெட்டியை யுருட்டினேன். பீ. ஏ. படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒரு Chemistry Practical இல் எடுத்து வைத்திருந்த பொட்டாஸிம் ஸையனட் ஒரு மூலையில் கிடைத்தது. உள்ளம் பூரித்தேன். எடுத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டேன். சமய லறையில் ஒரு வரையும் காணோம். ஒரு எண்ணெய்ப் புட்டியை எடுதது, சுத்தம் செய்து ஜலத்தால் நிரப்பி வலக் கையில் பிடித்துக் கொண்டு வெளியே வந்தேன்.

* * * *

உயர் தருக்களும் பசுங் செடி கொடிகளும் அடர்ந்திருக்கும் ஒரு வனம் வழியே வலக்கையில் ஒரு புட்டியைப் பிடித்த வண்ணம் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு வேகமாய் நடந்துக்கொண்டிருந்தேன். ஓர் ஆறு வழியில் குறுக் கிட்டது. “கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல்” சரியான இடம் கிடைத்தது என ஆங்கு கரையில் உட்கார்ந்தேன். “பூமியில்...............மடிந்திடவோ” என்ற பாட்டை பாடிக் கொண்டே ஜேப்பிலிருந்து பொட்டாஸியம் ஸையனட்டை எடுத்துப் புட்டி ஜலத்தில் போட்டுக் குலுக்கினேன். நானிருந்த விடமே குலுங்கினாற் போல் தென் பட்டது. தலை சுற்றினது. கண் இருண்டது. கை நடுங்கினது. ஆனால் ஒரே மன உறுதி. கண்ணை மூடிக்கொண்டே ‘கடக்’ மடக்‘கென’குடித்தேன். கரை சாய்வில் படுத்தேன். மடமட வென்று உருண்டேன். ஜலத்தில் தொப்பென விழுந்தேன். ஆனால் உயிர் போகவில்லை போலும். மூக்கிற்குள் தண்ணீர் சென்றது. மூச்சுவிடத் திணறி தத்தளித்து முக்களித்து, பெரு மூச்சு விட்டு, சரீரத்தைக் குலுக்கினேன். கை கால்களை உதறி அதிகப் பிரயாசத்தோடு எழுந்தேன்.

நான் படுக்கையிலிருந்து தான் எழுந்திருந்தேன். “எடா, நீ கண்டது கனவடா” என அறிவுறுத்துமாப் போல் பகலோன் குணதிசையில் எழுந்துக் கொண்டிருந்தான். மணி, டங், டங் கென ஏழு அடித்தது. பிற்பாடு காலைக் கடன்களை செய்வதற்காக எழுந்திருந்தேன். அப்போது தான் எனக்கு இன்று New year எனத் தெரிந்தது.

கெனில்வோர்த்

Sir Walter Scott

(V பாகம்-தொடர்ச்சி)

வேலன்ட் வியாபாரி வேஷங்கொண்டு வேகமாய்க் குதிரை மீதேறிச் சென்று கம்னர் சத்திரத்தை யடைந்தனன். அங்கு மைக்கலும் டார்பூபிப் பண்டிதரும் வந்திருந்தனர். அதை யறிந்த வேலன்ட் தன்னறைக்குச் சென்று மறைந்தனன். மைக்கலோ குடித்து, வெறித்து, உளறிக் கொண்டிருந்தனன். சாராயத்தைக் குடித்துப் பூராயத்தை வெளியிட்டனன். டாபூபி என்ன சொன்னாலும் கேட்கவில்லை. ஆகையால் அவரும் மௌனம் சாதித்தனர்.



தாங்கள் சாமான்களைக் கம்னர் மனைக்குக் கொண்டுபோக ஆள் அனுப்பும்படி டானியை வரவழைத்தனன் மைக்கல் சத்திரக்காரன் வேலண்டிடம் சென்று ஆமி இன்னும் அம்மனையி லிருப்பதாகவும் மிகவும் விசனத்தோடிருப்பதாகவும் கூறினன். மைக்கலும் டானியும் இங்கு இன்னும் ஒரு மணிநேரம் இருப்பர். இதுதான் சமயம். உன் மூட்டையைக் கட்டி எடுத்துக் கொண்டு ஆமியிடம் சென்று வியாபாரம் செய்வதுபோல் பேசி விட்டு வரலாம்.

"அது ஒரு மோசமான முறை—பண்டிதரும் அம்மனைக்குப் போவாரோ?" என்று வினவினன் வேலன்ட். அவரும் அங்கு போவார் என்று சொல்லப்பட்டது.

"அப்படியானால் அவர் முயற்சியை அவமாக்குவேன். எனக்குக் குறுக்குப் பாதை யுண்டானால் அதைக் காண்பி" என்று கேட்டு, எழுந்து, மூட்டையை எடுத்துக்கொண்டு காவல் கடந்து மனைக்குச் சென்று ஆமிக்கு முன்பாகத் தன் மூட்டையை அவிழ்த்து வியாபாரம் பண்ண ஆரம்பித்தனன். ஜெனட்டும் அங்கு இருந்தனள். தன் தந்தையின்

கட்டளைக்கு விரோதமாய் இக்காரியம் எப்படி நடக்கின்றது என்று அதிசயித்து நின்றனள். வாசனைத் திரவியங்களை ஆமி பார்த்துக் கொண்டிருந்தபோது "வாசனைத் திரவியங்கள் விலை உயர்ந்திருக்கின்றது. ஏனெனில் லீஸ்டர் பிரபு அரசியையும் பரிவாரங்களையும் வரவேற்பதற்காகச் செய்யும் ஆயத்தம் வெகு விமரிசையானது-ஆகையால் விசேஷமாய் வாசனைத் திரவியங்களுக்கு விலை யதிகம்'' என்றனன் வியாபாரி.

"அப்படியானால் நான் கேள்விப்பட்டது மெய்தான்" என்று ஆமி சொல்ல, "ஆம், மெய்தான்-அரசியும் அரசியின் சபையனைத்தும் ஒரு வாரம் பிரபுவின் மாளிகையில் விருந்தருந்துவர். அந்நாட்களுக்குள் அரசிக்கு ஓர் அகமுடையானும் இங்கிலாந்துக்கோர் அரசனும் ஏற்படுவர் எனப் பேசிக்கொள்ளுகின்றனர்'' என்று வேலண்ட் சொன்னான்.

"அதுபொய்-இங்கிலாந்தில் பிரதம பிரபுவின் பெயரைக் கெடுக்கலாமா?'' என்று ஆமி கேட்டனள்.

வேலண்டுக்கு இது ஆச்சரியத்தை விளைவித்தது. ஆமிக்கும் பிரபுக்கும் ஏதோ ஒருவித சம்பந்தம் இருக்கிறதாக அவனுக்குத் தெரியாது.

அதை மறைக்க அந்நேரம் ஆமி ஒரு வெள்ளிப் பாத்திரத்திலிருந்த மருந்தின் விலை விசாரித்தனள். அதற்கு வேலண்ட் "அது சகல பிணியையும் நீக்க வல்ல குரு மருந்து—மனநோயையும் மாற்ற வல்லது—டிரசில்லியன்கூட இம்மருந்தை உபயோகித்து நன்மை பெற்றவர். நற்சாட்சிப் பத்திரமும் கொடுத்திருக்கின்றனர்'' என்று அதன் சிலாக்கியத்தை எடுத்துரைத்தனன். ஆமி சாதாரணமாய் டிரசில்லியனின் சுக செய்தியை விசாரித்து அம் மருந்தையும் வாங்கினள். ஜேனட் தடுத்தனள். வியாபாரி தானே அதை யுட்கொண்டு சந்தேகம் தெளியச் செய்தனன். ஆமியும் உடனே அதில் கொஞ்சம் உட்கொண்டனள் சுகங் கண்டனள்.

ஆமி தன் அறைக்குள் சென்றனள். ஜேனட்டைப் பணங் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டனள். ஜேனட் தன் அம்மணிக்கு உத்தமத் தோழி யெனக் கண்ட வேலண்ட் அவளிடம் உள்ளதை உள்ளவாறு உரைத்தனன். டிரசில்லியன் ஆமிக் குதவி செய்யுமாறு தன்னை அனுப்பினதாகக் கூறினன். அதற்காகவே தான் வியாபாரி வேஷங் கொண்டு அங்கு வந்ததாகச் சொன்னான். அவளுடைய தந்தையோடு ஒரு வயோதிகன் வருவானென்றும் அவன் ஆமியை நஞ்சிட்டுக் கொல்ல வகை பார்ப்பானென்றும் தன்னிடம் வாங்கின மருந்தை உடனே சாப்பிட்டால் அது எந்த விஷத்தையும் முறிக்க வல்லது என்றும் சொல்லி இது விஷயம் ஒன்றும் ஆமிக்குத், தெரியப்படாது என்றும் சீக்கிரமாய்ச் சென்று ஆமி தன் மருந்தைச் சாப்பிடச் செய்யவேண்டும் என்றும் கூறினன். தீமையின் திகில் தீமையினும் கொடிது என்று எண்ணி ஆமிக்குத் தெரியாமல் இவளிடம் இதை இரகசியமாய்ச் சொன்னான்.

அந்நேரம் பேச்சுச் சத்தங் கேட்க வேலண்ட் வேலிக்குள் மறைந்தனன். ஜேனட் சாமான்களை மறைத்து வைத்தனள். டானியும் வேலைக்காரனும், ஜோசியனும் மைக்கலை அமர்த்தப் பிரயாசைப்பட்டனர். அவனை அடக்க முடியவில்லை, அவன் உளறின வார்த்தைகளிலிருந்து ஜோசியன் ஆமிக்கு விஷமூட்ட வந்திருக்கின்றனன் என ஜேனட் அறிந்து கொண்டனள். மைக்கலைப் படுக்க வைத்தனர். வேலண்ட் சொன்ன வார்த்தைகள் உண்மை யெனக் கண்ட ஜேனட் அம்மணியிடம் சென்று அவள் வாங்கின மருந்தை அருந்த ஏற்பாடு செய்தனள்.

மைக்கல் உளறினதிலிருந்து வார்னி யல்ல லீஸ்ட்டர் பிரபுதான் ஆமியின் புருஷன் என வேலண்ட் அறிந்து டாபூமியின் சதிமோசத்திலிருந்து ஆமியைக் காக்கும்படி வேஷமாறி வெளியே காத்திருந்தனன். இச்செய்தி அரசியின் காதில் விழுந்தால் பிரபு சிறைக்கூடம் செல்லவேண்டும் அல்லது மரண தண்டனைக்காளாக வேண்டுமென எண்ணி ஆமியின் உயிருக்கே உலைவைக்க துணிந்திருக்கின்றனர் என்பதையும் அறிந்துகொண்டனன்.

கெனில்வோர்த் வைபவம் எவர் வாயிலும் இருக்கும் செய்தி. லீஸ்ட்டர் பிரபு அரசியின் அன்புக்கு ஆளாயினர். எனினும் இங்கிலாந்தி லுள்ளோர் அனைவரிலும் அதிக துக்க சாகரத்தில் மூழ்கினவர் இவரே யன்றி வேறு எவருமிலர்.

"அரசியை விவாகஞ் செய்து அரசனாவேன் என்று ஊரார் பேசிக் கொள்ளுகின்றனர். அரசியும் அதை அறிந்தே அதிக அன்பும் தயையுங் காட்டு கின்றனர். நான் செய்ய வேண்டியது வேறு என்ன உளது? என் கையை நீட்டிக் கிரீடத்தை எடுத் தணிய வேண்டியது தான். ஆமியை விவாகம் பண்ணினதுதான் நான் செய்த தவறு. அவளும் அதை பகிரங்கப் படுத்த வேண்டுமெனச் சாதிக்கின்றனள். அரசிக்கு அது ஒரு சந்தோஷ செய்தி என நினைக்கின்றனள். தன் குடிகளில் ஒருவனை மணஞ் செய்ய வேண்டுமென்றிருக்கும் அரசிக்கு அவன் வேறொருத்தியை விவாகம் பண்ணினவன் எனத் தெரிந்தால் எவ்வளவு கோப முண்டாகும். என்னைக் கொன்று போட்டாலும் குற்றமில்லை. அல்லது சிறையி லடைத்தாலும் கேள்வி யில்லை.'' என்று லீஸ்ட்டர் பிரபு தயங்கினர்.

வைபவத்திற்கு வார்னியின் மனைவியும் வர வேண்டும் என்று அரசி அழைத்திருந்தனர். அதுவே லீஸ்ட்டர் பிரபுவின் சங்கடத்திற்குக் காரணம். ஆமியைப் போ லுருக்கொண்ட வேறு ஒருத்தியைக் கொண்டு வந்தாலும் டிரசில்லியன் முதலியோர் அதைக் காட்டிக் கொடுத்து விடுவர். கடைசியாக ஆமி அங்கு வரவேண்டுமென்றும் வைபவ காலமட்டும் தன்னை வார்னியின் மனைவியாகப் பாவித்துக் கொள்ள வேண்டுமென்றும் அவளுக்கு லீஸ்ட்டர் பிரபு எழுதி யனுப்பினன். அதில் தன் உயிருக்கு ஆபத்து வாரா வண்ணம் இதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் கெஞ்சிக் கேட்டனன். வார்னியே அக் கடிதத்தை எடுத்துச் சென்றனன். அதற் கிணங்கா விட்டால் அவள் என்றும் எழுந்திரா வண்ணம் படுக்கையிற் போட்டுக் கொல்லும் நஞ் சூட்ட ஆள் பார்க்க வேண்டும் என்றும் தீர்மானித்திருந்தனர்.

வார்னி கம்னர் மனைக்குச் சென்று கடிதங் காட்டினபோது ஆமி கோபங் கொண்டு அவனை அவமதித்துப் பேசித் துரோகியென அழைத்தனள். தன் மாண்புறு கணவன் இக்காரியத்திற்கு ஒருக்காலும் இணங்க மாட்டார் என எண்ணினள். டானியும் அவன் மகளும் அங்கு அச் சமயம் வந்து ஆமி கோபாவேஷத்தோடிருப்பதைக் கண்டனர்.

அவள் முகம் சிவந்திருந்தது. கண்களோ அக்கினிப் பொறிகளைக் கக்கின.

"என்ன செய்தாய்?" என்று டானி வார்னியைப் பார்த்துக் கேட்டனன்.

"நான் ஒன்றும் செய்யவில்லை. பிரபுவின் கடிதங் கொண்டு வந்தேன்" என்று கோபமாய்க் கூறினன்.

"துரோகி பொய் சொல்லுகின்றனன். நான் கெனில்வோர்த் வைபவத்திற்குச் சென்று இந்தப் போக்கிரியை என் கணவன் என்று ஒப்புக் கொள்ள வேண்டுமென்று பிரபு

சொன்னார் என்று இவன் என்னை ஏமாற்றுகின்றனன். இப்படிச் செய்தால் எப்படி நான் பிரபுவின் மனைவி யாவேன்? பிரபுவே பின்னால் என்னை பகிரங்கமாய் விவாகம் செய்து கொண்டாலும் என் பெயர் கெட்டது கெட்டது தானே! இப்படிப்பட்ட மானக் கேடான காரியத்தைச் செய்யச் சொல்லுவாரோ என் மாண்புறு பிரபு?" என்றனள் ஆமி.

"இதற் கிணங்கா விட்டால் பிரபு உயிர் போய் விடும்." என்று விளக்கிக் காட்டினன். எனினும் அவளுக்குக் கோபம் அதிகரித்தது. அவனை உடனே வெளி யேறும்படி கட்டளையிட்டனன். வார்னி வெளியேறி மந்திரவாதியிடம் சென்று நஞ்சு மருந்து வாங்கிக் கொண்டு வந்தனன். அவள் நரம்பு வியாதிக்கு அது நல்லது என்று சொல்லி அவளுக்குக் கொடுக்கும்படி டானியிடம் தந்தனன். டானியும் அதை அவள் குடிக்கும்படி கொடுத்தனன். ஜெனட்டோ இதைக் கண்டு பயந்தனள். அவள் வாங்கித் தான் குடிக்கப் போவதாகப் பாவனை பண்ணினள். டானி இடங் கொடுக்கவில்லை. அவள் கையினின்று பறித்தனன். டானியே குடித்துக் காட்டட்டும் என ஆமி கேட்டனள். அவன் அந்த அறையிலிருந்தோடி விட்டனன். வார்னியிடம் சென்று அதை அறிவித்தனன்.

ஜெனட் உதவி தேடப் புறப்பட்டனள். அந்நேரம் வார்னியே வந்து அம்மருந்தை ஆமி அருந்தும்படி பலவந்தம் பண்ணினன். வீட்டில் ஒருவருமில்லை. நஞ்செனத் தெரிந்தும் கொஞ்சமும் தப்ப வழியின்றி நெஞ்சந் துணிந்து ஆமி அதை அருந்த வேண்டியதாயிற்று. ஜெனட் வந்தபோது ஆமி மரணத் தருவாயிலிருந்தனள்.

"வார்னி பலவந்தம் பண்ணி விஷமூட்டினன். பெலனற்றுப் போனேன். என் உயிர் அமைதியாய் நீங்கட்டும்" என்று ஆமி கூறினள்.

"விஷம் உண்டாலும் விஷங் கொள்ளாது. ஏனெனில் முதலாவது நான் கொடுத்த மருந்து விஷத்துக்கு மாற்று. விஷத்தை முறித்து விடும். பிழைத்துக் கொள்ளலாம். டிரசில்லியனுடைய நண்பனாகிய அந்த வியாபாரியைக் கண்டு பிடித்தேன். மோசமில்லாத இடத்திற்குக் கொண்டு போய் விடும்படி ஒழுங்கு பண்ணியிருக்கின்றேன். நடக்க முடியுமா?" என்று ஜெனட் வினவினள்.

"வேறு என்ன செய்ய முடியும். இந்த இடம் மோசமான இடம் உயிர் தப்பிப் பிழைப்பதே உசிதம். நீயும் என்னோடே கூட வரமாட்டாயா? தனிமையாய் எப்படிப் போவேன்?" என்றனள் ஆமி.

"நான் இங்கிருந்தால் நீங்கள் தப்ப வழியுண்டு. அல்லா விட்டால் நம்மைத் துரத்திக் கண்டு பிடிப்பர். இங்கிருந்தே உங்கள் உயிரைக் காக்க வழி தேடுவேன்." என்று சொல்லிப் பயணத்துக்குரிய காரியங்களை ஆயத்தம் செய்தனள் ஜெனட். பெருமாட்டி உடை மாற்றிக் கொண்டனள். யாவரும் அயர்ந்த நித்திரையிலிருந்தனர். ஜெனட் சாவிகள் வைத்திருந்ததால் இவர்கள் வெளியேறுவது எளிதாயிருந்தது.

தந்தை யிடம் சொல்ல ஆமிக்கு இஷ்டமில்லை. பேர் கெட்ட பிறகு ஊர் கிட்டப் போகலாகாது என எண்ணினள். பிரபு உத்தரவுந் தேவை. பகிரங்க விவாகமுமாக வேண்டும். பிறகு இங்கிலாந்தின் முதன்மையான பெருமாட்டியாகப் போகவேண்டும் என்று எதிர் பார்த்தனள். ஆகையால் நேரே கெனில்வோர்த் போக உத்தேசித்தனள். "பிரபு ஏற்றுக் கொள்ள வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்" என்று சொல்லி ஜெனட் ஆமியை வெளியே நின்ற வேலன்டண்டையில் ஒப்படைத்தனள்.

(தொடரும்)

கொலை! கொலை!!

ராஜு

வெள்ளிக்கிழமை யிரவு. படக்காட்சி முடிய மணி பத்தாய் விட்டது. அன்று அசாத்திய கூட்டமாதலின் ஒவ்வொருவராக வெளி வருவதற்கே வெகு நேரமாயிற்று. எல்வாறோ இங்குமங்கும் புகுந்து, வேர்த்து விறுவிறுத்து, பசி ஒரு புறம் தாக்க அருகிலுள்ளதொரு சிற்றுண்டி சாலைக்குள் நுழைந்தேன். ஆனால் திரும்பி வெளிவரும் போதோ சூடான சில பண்டங்களும் ஒரு கப் டீயும் உட்சென்றதின் பேரில்—களைப்பு நீங்கி களிப்புமிக புத்துயிர் பெற்று துவிச்சக்கர வண்டி மீதேறி வீட்டை நோக்கி செல்லலானேன்.

எங்கும் ஒரே நிசப்தம். காலையில் கரையும் காகங்களும், பகலிலே பாடும் பட்சிகளும், மாலையில் நம்மை மயக்கும் மயி லினங்களும் அயர்ந்து நித்திரை செய்ய, இரவே எமக்கு இன்பம் அளிக்கும் நேரம் எனக் கூறுவது போன்று ஆந்தைகள் கதறின படியே இங்குமங்கும் பறந்து நிறைந்திருந்த நிசப்தத்தை அவ்வப்போது கலைத்தன. தூரத்தில் நாய்கள் ஊளையிடுவது இடையிடையே கேட்டது.

பூர்ண சந்திரன் பரந்த வான வீதி வழியே உல்லாசமாக ஊர்ந்து சென்றான். மினுக் மினுக்கென ஒளி வீசும் மீன்கள், நீல நிற ஆடை மீது பரம்பியிருக்கும் மாணிக்கக் கற்களைப் போல எங்கும் நிறைந்திருந்தன. சாம்பரின் நடுவே கிடைக்கும் கண்ணாடித்துண்டென முகில்களினிடையே சந்திரிகை, அவைகளால் மூடப்படுவதும், வெளி வருவதுமாக விளையாடிக் கொண்டிருந்தது. வெண்ணிற மதியின் தண்ணொளி எனது உள்ளத்தை கொள்ளை கொண்டது. 'அண்டத்தைச் சுமப்பவனுக்குச் சுண்டக்காய் எம்மாத்திரம்' என்பது போல், கடலையும் கவரும் சக்தியுள்ள சந்திரனுக்கு என்னுள்ளத்தைக் கவரல் பெரிய காரியமா?

'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் கொங்கலர்தார்ச் சென்னிகுளிர் வெண்குடை போன்றிவ் வங்கணுலகளித்தலான்'
(சிலப்பதிகாரம்)

என நம்முன்னோர்களால் புகழப்பட்ட திங்களின் ஒளியால் மயங்கிய யான் மெய் மறந்து சொல்லற்கரிய ஆனந்த மடைந்தேன்,

இவ்வளவில் ஒரு கரிய மேகமதனைத் தழுவ, முன் வெருண்டோடின இருட்கணங்களனைத்தும் மறுபடியும் திரண்டு பூவுலகை மூடத் தலைப்பட்டன. அதே சமயம் திடீரென ஏதோவொன்றின் மீது மோதித் துவிச்சக்கர வண்டியோடு தலை கீழாகக் கவிழ்ந்தேன். நான் வீழ்ந்த சத்தத்தை யொட்டினாற் போல் ''ஐயோ! படுபாவி! கொலைகாரா! என்ற ஈனக்குரல் எழுந்தது. கொலை எனும் வார்த்தையைக் கேட்டதுமே என் உடல் எல்லாம் சிலிர்த்தது. தலை சுற்றிற்று கை கால்கள் சோர்ந்தன.

மெல்ல எழுந்து எட்டிப்பார்த்தேன். ஐயகோ! என்ன அகோர காட்சி! தொண்டுக் கிழவனொருவன் துவிச்சக்கர வண்டியினடியில் மாண்டு கிடந்தான். அவ்வளவுதான்! உலகமே என்னைச் சுற்றி ஓடுவது போல் தோன்றிற்று. விலங்கு — நியாயஸ்தலம் — தூக்கு மேடை-அனைத்தும் ஒவ்வொன்றாக என் கண் முன் தோன்றி குளிர்ந்த காற்றில் மறைந்தன. இதயம் படபட வெனத் துடிக்கவாரம்பித்தது.

இங்ஙனம் மனங் குழம்பி, கண் கலங்கி, ஒன்றுந் தோன்றாமல் உட்கார்ந்திருக்கு

மளவில் புண்ணில் கனல் நுழைந்த தென தூரத்தில் யாரோ வருவதுபோல் காலடிச் சப்தம் கேட்டது. கொழுகொம்பற்று துவழும் கொடியை யொப்ப துவண்டு கிடந்த நான் தூரத்தில்; காவல் காக்கும் கான்ஸ்டபிள் வருவதை நில வொளியிற் கண்டு எதிர் திசையில் ஓட்டம் பிடித்தேன். முள்ளையும் கல்லையும் மிதிக்கவும், மேட்டிலும் பள்ளத்திலும் செல்லவும் அப்போது மனதுக் கண் எற்பட்ட தைரியம் என்றும் வராது. இவ்வாறு தலை தெறிக்க ஓடி ஓராற்றோரம் வந்தடைந்தேன்.

முன் மகிழ்ச்சியை ஈந்த மதி என்னை இகழ்ச்சியோடு நோக்கி பின் பார்க்க கூட பொறுக்காமல் மேகங்களினிடையே மறைந்தது. முன்பு என்னை முக மலர்ச்சியுடன் நோக்கி கண் சிமிட்டிய நட்சத்திரம் ஒவ்வொன்றும் என்னை முறைத்துப் பார்த்து "கொலை! கொலை!!" என்று கூறுவது போன்றிருந்தது. இச் சமயம்,

> 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா னன்னார்
> உயிர் நீப்பர் யானம் வரின்'

என்ற குறள் ஞாபகத்துக்கு வந்ததும், கேவலம் பகுத்தறிவு அற்ற-மேலும் பேசத் திறனற்ற-மரை யவ்விதம் செய்யின், ஆறறிவு படைத்த மானிட னொருவன் எவ்விதம் தன் மானத்தைக் காத்தல் வேண்டும் என்றொரு கேள்வி என் மனத்திடையே எழுந்தது. சுருங்கக் கூறின், கச்சேரிக்குப் போய் கை கட்டி தூக்கு மேடையில் தூங்குவதற்குப் பதிலாகத் தற்கொலை செய்து கொள்வதே உசிதம் என துணிந்து ரயில்வே பாலத்தை நோக்கி விரைந்தோடினேன்.

நடுப் பாலத்தை யடைந்ததும், உற்றார் உறவினரையும் நாட்டார் நள்ளாரையும் ஒவ்வோருவராக நினைத்து அவர்களுக்காக எல்லாம் வல்ல கடவுளை நோக்கிப் பிரார்த்தித்து சலசல வென்று பாலத்தின் கீழோடும் ஆற்றில் குதிக்கக் கையை உயர்த்தினேன்.

அதே சமயம் "ஏண்டா ராஜு! அங்கு என்னடா செய்கிறாய்? மணி பத்தாகிறதே. விளக்கை யணைத்து விட்டுப் போய் படடா தடி………" என்ற சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன். சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் பத்து முறை அலறிற்று. கண்ணைத் துடைத்து, கொட்டாவி விட்டு மார்பின் மீது விழுந்து கிடந்த "சுண்டக்காய் மர்மம் அல்லது அண்டை வீட்டில் அதிர் வெடி" எனும் நாவல் புத்தகத்தை யெடுத்து மேசை மீது வைத்தேன். அப்போதுதான் நான் கண்டதெல்லாம் ஒரு கனவென உணர்ந்தேன். உணர்ந்ததும் என்னாலதை வித்யாதனத்துக்கு எழுதியனுப்பாமலிருக்க முடியவில்லை.

S. William Sargunaraj
Tirupapuliyur

—(o)—

ரபீந்திரநாத் தகோர்

Satyaraja N. Chadagar.



ரபீந்திரநாத் தகோர்.

கடந்த ஆண்டில் ஆகஸ்ட் மீ 7உ இந்தியாவிற் சிறந்தவருள் ஒருவர் தம் 80ம் ஆண்டில் தேக வியோக மடைந்தனர். இவரே கவிச் சக்கரவர்த்தி ரபீந்திரநாத் தகோர் - இவர் 1861௵ மே மீ 6உ கல்கத்தாவில் பிறந்தவர். மகாரிஷி தேவேந்திரநாத் தகோர் இவர் தந்தை. பிரம சமாஜ் என்னும் சங்கத்துக்கு வெகு காலம் இவர் தந்தை தலைமை வகித்திருந்தனர். இவர் குடும்பம் செல்வமும் கல்வியும் உள்ளது. அவர்களுள் திறமை வாய்ந்த பெரியார் பலர் உளர். சில பெண்களும் சிறப்பு வாய்ந்தவரே - இவர் குடும்பத்

தில் 14 பிள்ளைகள். ரபீந்திரநாத் கனிஷ்ட புதல்வர். இவர் சிறு பையனா யிருந்தபோது இவர் தாயார் மரித்துப்போனார். இவர் தந்தை வீட்டை விட்டு வெளியே அடிக்கடி போகவேண்டிய திருந்ததால் இவர் வேலைக்காரரிடமே பயிற்சி பெறவேண்டிய தாயிற்று.

குடும்பத்தில் எல்லா பிள்ளைகளும் விசேஷ வரம் பெற்றவர்கள். சிரேஷ்ட புதல்வன் பெரிய தத்துவ சாஸ்திரி யாயினர். அடுத்தவர் பெரிய கலெக்ட்டர் வேலைக்குப் படிக்கும் சிலாக்கியம் பெற்ற முதல் இந்திய மாணவர். மூன்றாவது பையன் சித்திரம் எழுதும் சக்தி வாய்ந்தவர். இவர் சகோதரி சுவர்ண தேவியோ பத்திராதிபராயினர் ஆங்கில நவீனம் எழுதுவதிலும் மிகத் தேர்ச்சி வாய்ந்தவர்.

கல்வி

ஐந்து வயதில் ரபீந்திரநாத் கல்விச் சாலைக்குப்போய் கற்றுக் கொள்ள ஆரம்பித்தனர். அது அவருக்கு அவ்வளவு இஷ்டமில்லை. ஆகையால் அவர் தந்தை வீட்டிலே கல்வி கற்க ஏற்பாடு செய்தனர். தம் தந்தையோடு இவர் இமயமலை, போல்பூர் முதலிய இடங்களுக்குப் போய் வருவ துண்டு. இயற்கையின் அலங்காரத்தை அறிய ஏது உண்டாயிற்று. வீட்டிலே இதற்கு இடமில்லை. அண்ணன்மார் அவர் கல்விச்சாலைக்குச் சென்று கற்றுக் கொள்ளவேண்டு மென்று தூண்டினர் அவர்கள் பிரயாசம் வீணாயிற்று. சொந்தமாய் வீட்டில் உபாத்திமார் வைத்துத் தமக்கிஷ்டமான பாடங்களைக் கற்றுக் கொண்டதின் பலனாக சிறு பிராயமுதலே கதைகள் எழுதவும், கவிகளும் பாட்டுக்களும் கட்டவும் ஆரம்பித்தனர். பல நூல்களையும் வாசிப்பர்.

1877௵ 17ம் வயதில் சட்டம் படிக்க இங்கிலாந்துக்குச் சென்றனர். அடுத்த ஆண்டில் பட்டம் பெறாமலே திரும்பினர். சில ஆண்டுகளுக்குப் பின் மறுபடியும் இங்கிலாந்துக்குப் போயினர். அங்கிருந்து சங்கீதம் கற்றுக் கொள்ள ஜெர்மனி தேசஞ் சென்றனர். அதோடு அவர் பாடசாலைப் படிப்பு முற்றுப் பெற்றது. இவர் கெட்டிக்கார மாணவன் எனப் பேர் வாங்காததிற்குக் காரணம் தமக்கு இஷ்ட மில்லாத பாடத்தைப் படிக்க மறுத்ததே-

இலக்கியத்தில் இவருக்குப் பிரீதி யுண்டு. இவர் சகோதரன் வங்காள பாஷையில் ஒரு பத்திரிகை பிரசுரித்தனர். அதற்கு இவர் கவிகளும் கட்டுரைகளும் அனுப்புவ துண்டு. வீட்டிலே உள்ளவர்களிடம் அவருக்கு மதிப்புக்கிடைக்க வில்லை.

குடும்பம்

1883ம்௵ 22ம் வயதில் இவர் மிரி நளினி தேவியை விவாகம் பண்ணினர் - இவர்களுக்கு இரண்டு ஆணும் மூன்று பெண்ணுமாக ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். இப்போது ஒரு மகனும் மகளுமே உயிருட னிருக்கின்றனர். 1902ம்௵ இவர் மனைவி மரித்தனர். ஆறு மாதத்திற்குப் பிறகு ஒரு மகள் இறந்தனள்.

குடும்பத்தின் நிலங்களைப் பார்த்துக்கொள்ளும்படி இவர் தந்தை இவரை விவாகமான பின்னர் ஷிலைடா என்னும் ஊருக்கு அனுப்பினர். கிராமத்தாரின் அபிவிருத்திக்காக இவர் அங்கு அரும் பாடுபட் டுழைத்தனர்.

இக்காலத்தில் இவர் ஒரு மாதப் பத்திரிகைக் காசிரிய ராயினர். இதில் இவர் கீர்த்தனைகளும், கவிகளும், நாடகங்களும், வியாசங்களும், அரசியற் கட்டுரைகளும், நவீனங்களும், கதைகளும் எழுதுவதுண்டு.

போல்பூர் ஆசிரமம்

1901-௵ நவீனம் எழுதுவதில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தனர். தம் தந்தை தியானத்துக்காக சென்ற போல்பூரில் ஓர் ஆசிரமம் இவர் ஸ்தாபித்தனர். ஓரிடத்திலும் இல்லாத விதமாய் ஓர் கல்விச்சாலையை அவர் அங்கு அமைத்தனர். பிள்ளைகளுக்குச் சுயாதீனமும் இருந்தது. எழுத வாசிக்க மாத்திரம் அல்ல ஆடவும் பாடவும் கற்றுக் கொடுத்தனர். கை வேலையும் செய்யப் பழக்கினர். இப் பாடசாலையே பின்னால் சாந்தினிக்கேற்றான் அல்லது சாந்தி வாசஸ்தலம் (சமாதான உறைவிடம்) என்றழைக்கப் படும் சர்வ கலா சாலையாயிற்று.

கீர்த்தி

1912-ம் ௵ 51-ம் வயதில் தகோர் மூன்றாவது தடவை இங்கிலாந்துக்குச் சென்றனர். அச்சமயம் கீதாஞ்சலி என்னும் வங்காள புஸ்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பும் அவர் அங்கு கொண்டு போயிருந்தனர். இலக்கிய சிலாக்கியத்திற்காக அளிக்கப்படும் நோபல் பரிசு இவருக் குரிய சிலாக்கியமாயிற்று. இது மகா விசேஷமான கௌரவப் பரிசு. கல்கத்தா சர்வ கலாசாலை இதற்கு முன் இவருக்குக் கௌரவப் பட்டம் அளிக்க மறுத்தது. இப்போதோ இலக்கியப் பாண்டித்தியம் பெற்றவர் எனப் பட்டம் சூட்டிற்று. 1914ம் ௵ பிரபு பட்டம் பெற்றனர், 1919-ம் ௵ அமிரிட்சார் சம்பவத்தின் பலனாக அப் பட்டத்தை வாபீஸ் செய்தனர்.

மதிப்புரை

ரபீந்திரநாத் தகோர் பண்டிதர் அடக்கமுள்ளவர். தன்னயங் கருதா துல குவப்பாக் குபவர். உன்னத சன்மார்க்கக் குணலட்சணமுடையவர். பத்தாம் வகுப்புத் தேறாத இவர் உலகி லுள்ளோர் தம்மை இந்திய கவிச் சக்கரவர்த்தி யென் றழைக்கும்படி சுய முயற்சியால் முன்னேறினர். இவர் தாழ்மை, தயாளம், பட்சம், பெருந்தன்மை, முயற்சி, ஊக்கம், உற்சாகம், முதலிய நற் சிந்தை பொருந்தியவர்.

ஒரு கவிச் சக்கரவர்த்தி, ஒரு தத்துவ சாஸ்திரி, ஒரு ரிஷி, ஒரு குரு, ஒரு நடிகர், ஒரு சித்திரக்காரர், ஒரு தேசாபிமானி, ஒரு நியாயவாதி, ஒரு வியாச ஆசிரியர், சமாதானமும் நல்லெண்ணமும் பிறப்பிக்கும் பிரபு, மக்கள் நேசர், கிழக்கையும் மேற்கையும் ஐக்கியப் படுத்தும் ஓர் ஆள், புத்தி சக்தி வாய்ந்தவர், தேச விருத்தி செய்பவர், நித்திய வஸ்துவில் தேட்ட முடையார், ஒரு பிரசங்கி, ஒரு வழிகாட்டி, ஒரு கல்விக் களஞ்சியம், என்னும் பல நாமங் கொண்ட ஓர் ஆள் இவரே!

———(o)———

“ இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம்; இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமா யிருப்பதாக ! ”

———(o)———

“இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்து போக வில்லை.”

துப்பறியும் நிபுணன்

Charles Selvaraj, Cuddalore

ஹலோ! ஹலோ!

நெ. 5. ஸிட்னி போலீஸ் ஸ்டேஷன் தானே. ஆம்.

நன்று தற்சமயம் ஸிட்னிக்கு 11-40க்கு வரும் ரெயில் வண்டியில் ஓர் ஆடவன் ஏழு வைரங்களை எடுத்துக் கொண்டு, இரண்டாம் வகுப்பில் வருகிறான். அவனைப், பிடித்து 'அரெஸ்ட்' பண்ண வேண்டும். ஆதலால் நீங்களும் மற்றும் சிலரும் அவ் வண்டியில் ஏறிக் கொள்ளவும். அவன் உயரம் சுமார் 5 அடி 10 அங். வயது சுமார் 25.

தாங்கள் யார்?

(பதிலைக்காணோம்)

உடனே ஸப் இன்ஸ்பெக்டரும் ஏழு போலீஸ் ஜவான்களும் புறப்பட்டனர். மணி டிங் என $11\frac{1}{2}$ அடித்தது.

ரயில் வண்டி பிரமாண்டமான ஆர்பாட்டத்துடன் ஸிட்னி வந்து சேர்ந்தது. அங்கு $\frac{1}{2}$ மணி நேரம் நிற்ப துண்டு. ஆனால் அன்றைக்குச் சற்று சீக்கிரமே கார்டு தனது கொடியை காட்டினான். வண்டியும் வாயு வேகத்தில் புறப்பட்டது.

இரண்டாம் வகுப்பில் ஐந்து பிரயாணிகள் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களில் நால்வர் வாலிபர், மற்றொருவர் வயதில் சற்று முதிர்ந்தவர். ஒருவர் ஏதோ அலுவலாய் 'மெல்போர்ன்' போகவேண்டும் என்று சொல்லிக் கொண்டார். அவர் பெயர் 'வில்லியம்'. நல்ல கட்டான யாக்கையும், சுமார் ஆறு அடி உயரமும் வாய்ந்தவர். ஏதோ அநேக காகிதக் கட்டுகளை வைத்துக் கொண்டு, அதை மிக உன்னிப்புடன் கவனித்தும், சிற்சில சமயங்களில் சம்பாஷணையில் கலந்து கொண்டுமிருந்தார். மற்றவர் பெயர் வாட்சன் என்பதில் ஐயம் இல்லை. அவர் கப்பற் படையில் ஏதோ ஓர் தலைமை ஸ்தானத்தைத் வகித்திருப்பவர்போல் ஆடை அணிந்திருந்தார். மூன்றாமவர் ரெவினியூ போர்ட்டில் தான் ஓர் உத்தியோகஸ்தர் எனக் கூறிக் கொண்டார். அன்னாரை ஏனையவர்கள் பிரான்கோ என்று அழைத்தனர். அவர்தான் வயதில் முதிர்ந்தவர். மற்ற இருவரும் சகோதரர்களைப் போலக் காணப்பட்டனர்.

இவ்வாறு இவ் வைவரும் பேசுகையில் பத்திரிகையைப் பார்த்தவர் பத்திரிகையை மூடிவிட்டு, 'ஒரு கள்வன் ஏழு வைரங்களை அபகரித்து தப்பி ஓடிவிட்டானாம். அவனைப் பிடிக்க போலீஸார் முயற்சிக்கின்றனர். ஆனால் அவன் இன்னும் பிடிபட வில்லையாம்' என்று கூறினார்.

பிரான்கோ :—ஆம் நானும்தான் அப்படி கேள்விப்பட்டேன். அவன் தற் சமயம் ஸிட்னிக்கு வந்திருப்பதாகவும் ஓர் வதந்தி யுள்ளது. அவன் ஓர் இத்தாலி வாசி. அவன் பெயர் 'சார்லி' என சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

இப்படி பேசுகையில் வண்டி அடுத்த ஸ்டேஷனை அணுகியது. பிரான்கோ வண்டியினின்றும் இறங்கலானார். மூலையில் மௌனமாக அமர்ந்திருந்த வில்லியம் அவருடைய பொருட்களை எல்லாம் இறக்கி விட்டு அவருக்கு வந்தனம் கூறி தன் இருப்பிடத்தில் அமர்ந்து

மறுபடியும் தன் கவனத்தை தன் காரியத்தில் செலுத்தினான். பளிச்சென்று ஒரு காகிதம் அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டது. அதில் 'சார்லி' என்று அச்சடிக்கப்பட்டிருந்தது. மேல் புறத்தில் ஓர் இத்தாலிய மாதிற்கு விலாசம் எழுதப்பட்டிருந்தது. உடனே அப்பிரயாணிகளின் முகங்கள் சிவந்தன. சற்று முன் இறங்கியவர் திருடரா அல்லது அந்நால்வருள் ஒருவர் திருடரா என்னும், ஓர் பெரும் கிளர்ச்சி தோன்றியது. அவ் விரு சகோதரரும் சற்று முன் இறங்கியவர் திருடரல்ல எனக் கூறினர்.

வாட்சன் :—ஏன் அவர் திருடராய் இருந்தாலும் இருக்கலாம். அவ் விருவரும் 'நிச்சயமாக இல்லை' என வாக்குறுதி செய்தனர் 'நம் நால்வருள் யாரோ ஒருவர்தான் திருடர்' என அவ் விருவரும் சொல்லினர்.

ஆனால் வில்லியம் தன் காரியத்திலே மட்டும் கண்ணும் கருத்துமாய் இருந்தான். வண்டி அடுத்த 'ஸ்டேஷனை' அடைந்தது. அந்நால்வரும் தங்கள் நால்வரையும் போலீசாரிடம் ஒப்பிவித்தால் தான் திருடர் யார் என நிச்சயிப்பார்கள் என்று கூறினார்கள்.

அச் சமயம் வில்லியம் இறங்கி அவர்களை அடுத்த ஸ்டேஷனில் சந்திப்பதாக கூறினார். வாட்சன் அதற்கு சம்மதித்தான். ஆனால் இருவரும் மறுத்தனர்.

வில்லியம் :—அப்படியானால் ஒரு கோப்பைத் தேத் தண்ணீர் பருகிவிட்டு வருகிறேன்.

'சீக்கிரம் திரும்பு' என்ற பதில் கிடைத்தது. கார்ட்டும் மணியை அடித்தான். வண்டியும் புறப்பட்டது. வில்லியத்தைக் காணோம். மூவரும் திகில் அடைந்தனர். அடுத்த விநாடியில் பரபரப்புடன் ஓடி வந்து வண்டியில் ஏறினார்.

மறுபடியும் விசாரணைத் தொடங்கியது.

வாட்சன் :—(வில்லியத்தை நோக்கி) ஏன் அவ்வளவு தாமதமாக வண்டியில் ஏறினீர் ?

வில்லியம் :—(புன் சிரிப்புடன்) தே தண்ணீர் மிக சூடாக இருந்ததால், அதை ஆற்றிக் குடிப்பதற்குள் மணியாகி விட்டது.

அந்நால்வரும் ஒருவரை யொருவர் திகிலுடன் நோக்கினர். வில்லியம் தன் காகிதக் கட்டுகளை யெல்லாம் சீர்படுத்தி கட்டி வைத்து விட்டு, தன் தலையை நிமிர்த்தி ஏதோ உரைக்கத் தொடங்கினான். வண்டியும் மற்றொரு ஸ்டேஷனை சேர்ந்தது. ஏழு போலீஸ் ஜவான்களும் ஒரு ஸப் இன்ஸ்பெக்டரும் அவ் வண்டியில் ஏறி வில்லியத்திற்கு மரியாதை செய்தனர்.

வில்லியம் :—(வாட்சனைக் காட்டி) இவனை கைது செய்யுங்கள்.

வாட்சன் :—(கோபத்துடன்) நீ யார் ?

வில்லியம் தன் மேல் அங்கியை அவிழ்த்தான். உற்று நோக்கினால், ஆஸ்திரேலியாவில் பிரசித்திப் பெற்ற துப்பறியும் நிபுணரான பென்டிக் கைத் துப்பாக்கியுடன் நின்றார். அவ் விருவருக்கும் தூக்கி வாரிப்போட்டது. பின் பரிசோதித்ததில் ஏழுவைரங்கள் வாட்சனின் வலது பையிலிருந்து எடுக்கப்பட்டன.

இருவரும் (பென்டிக்கை நோக்கி) 'நீர் எவ்வாறுகண்டு பிடித்தீர்'.

பேன்டிக் :—நான் முதன் முதலில் அவன் மீது சந்தேகங் கொண்டு அதை கண்டுபிடிக்க அக் கடிதத்தை நான்தான் எவருக்கும் தெரியாமல் போட்டேன். அவன் சற்றுமுன் இறங்கிய பிரான்கோ மீது பழியை சுமத்தப் பார்த்தான். அவனுடைய ஆடைகள் இதாலியாவில் தைக்கப் பட்டனப்போல் காணப்பட்டன. அன்றியும் அவன் தன் ஆடைகளை இதோடு இரு முறை மாற்றி விட்டான்' தன் மீது பிறர் சந்தேகப்படா வண்ணம் பெரும் உவகை உற்றவனைப்போல உரையாடிக் கொண்டிருந்ததால் நான் இறங்கி போலீஸ் ஜவான்களை அடுத்த ஸ்டேஷனில் என்னை சந்திக்கும்படி கூறிவந்தேன்.

இருவரும் பென்டிக்கின் அரும் செயலைக் கண்டு பெரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

BY CHARLES SELVARAJ,
c/o S. P. Rajarathinam,
Revenue Inspector,
Cuddalore.

—(o)—



சீனப்பையன்கள்

சீனர், தேசிய உடை உடுத்து
கின்றனர்.

இந்தியர், எவ்வித உடை உடுத்து
கின்றனர் ?

ஆங்கிலேயர் உடையோ ;

இந்தியர் உடையோ ?

—(o)—

1941 – 1942

1941	அநேக கஷ்டங்களின் ஆண்டு எனினும் அவ்வாண்டு வெற்றியின் ஆண்டாயிருந்ததினால் இவ் வாண்டுக்குள் பிரவேசித்திருக்கிறோம். இது கடவுளின் பெரிதான இரக்கம்.
1942	என்னமாய் இருக்குமெனத் தெரியாது. எனினும கடவுளின் கிருபையால் அது எப்படி முடியும் எனத் தெரியும். வெற்றியின் ஆண்டாய் முடியும். நன்மை நாடும் சகலருக்கும் சகலத்திலும் வெற்றியுண்டாகட்டும்.

'காலத்தின் விசேஷம்.'

(P. பாலசுப்ரமணியம், 5-ம் பாரம்)

The Union High School, Coimbatore

இப் பூதலத்தில் வாழும் மக்கள் அனைவரும் காலச் சக்கரத்தில் கட்டுண்டு சுழன்று கொண்டிருக்கிறார்கள். காலச் சக்கரம் சுழலும் வேகத்தை யாவரால் தான் கணக்கிடக்கூடும்! இதனாலேயே 'இன்றைக்கு இவ் வுலகில் சஞ்சரிக்கும் மக்களை நாளைக் கிருப்பர்' என்று எண்ணவும் திட மில்லை.

நாளுக்கு நாள், வருடத்திற்கு வருடம் காலத்தின் போக்கு ஓர் விசித்திர விளையாட்டாகவே காண்கின்றது. விதவிதமான விஞ்ஞானக்கலைகளும், சாஸ்திரங்களும், நவநாகரிகங்களும் பெருகிக் கொண்டே வருகின்றன. பாலைவனங்களில் திடீரெனப் பெரிய மணற் குன்றுகள் ஏற்படுகின்றன. சில நாட்களில் அவை இருந்த இடமும் தெரிவதில்லை. அவைபோல், மனித வாழ்க்கையில் இன்று பெரிய ஐஸ்வரியவானாக இருக்கிறவன் நாளை ஏழையாகி விடுவான்; இன்று ஏழை என்று கருதப்படுகிறவன், நாளை எல்லோராலும் புகழப்படும் பெரும் தனவானாவான்.

இது பற்றியே ஆன்றோரும், "வாலிபமும் முதுமையும், இன்பமும், துன்பமும், செல்வமும், வறுமையும் நிலைத்திரா" என்றனர் போலும். இக் காலத்தில், பணத்தினாலோ, கல்வியினாலோ, ஒருவன் சிறப்புற்றிருப்பானானால், என்றும் எவரிடமும் அவனை இவ்வுலக மாந்தர் வாயார வாழ்த்துகின்றனர். பணம் எப்பொழுதும் ஒரு நிலை நில்லாது என்பது யாவரும் அறிந்த செய்தி. கல்வி கற்றவன் தன் னுயிரை இழக்கும் வரை, கல்வி அவனை விட்டகலுவ தில்லை, எனவே கல்வியிலும் செல்வத்திலும் முதல் ஸ்தானம் கல்விக்கே உரியதாகும்.

வள்ளுவர், கம்பர், ஔவையார் இன்னும் பல கவிச்சக்ரவர்த்திகள் விளங்கிய இவ் விந்திய நாட்டில் காலச் சக்கரத்தைச் செலுத்தும் நாம் ஏற்ற கல்வியை கற்பது மிகவும் அவசியம்.

நாம் காலத்தை வீணாகச் செலவழித்தல் கூடாது. எவ்வளவுக் கெவ்வளவு காலத்தைப் பிரயோஜனப்படுத்த வேண்டுமோ, அவ்வளவுக்கவ்வளவு செய்தே தீரவேண்டும். ஏனெனில் நமக்குக் குறிக்கப்பட்டிருக்கும் காலம் மிகவும் குறுகியது. 'காலமும் அலையும் ஒருவனை எதிர்பார்த்து நிற்குமா'? என்பதைச் சிலர் மறந்து, ஊர்வம்பளந்தலிலும், வீண் பொய் பேசலிலும், பிரயோஜனமின்றி தற் காலத்தில் வயிற்றுப்பாட்டிற்கென்று ஏற்பட்டுள்ள சில பத்திரிகைகளை வாசிப்பதிலும் இன்னும் சூதாட்டம் சீட்டாட்டம் முதலிவைகளில் விலைமதிக்க முடியாத காலத்தை அதிகமாகச் செலவிடுதைப் பார்க்குங்கால், மனம் வேதனை யடையும் என்பதில் ஐய முண்டோ?

எளிய குடும்பத்திற் பிறந்த முத்துசாமி ஐயர் என்பவர் மேன்மை யுடையக் காரணம் என்ன? காலத்தை வீணாகக் கழிக்காமல் காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருந்ததினால் தான் என்பது நன்கு விளங்குகிறதல்லவா? இன்னும் இவர்களைப்போன்ற அறிவாளிகள் மேன்மையுற்றதை ஆராயின், காலத்தை வீணாகக் கழிக்கும் சோம்பேறிகள் கூட நற்புத்தி பெற்றுத் தம்மால் இயன்ற வரையில் புகழடைவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமே யில்லை.

எனவே, இக் காசியினில் சகல போராட்டத்தையும் நடத்திச் சகல ஜெயத்தையும் அடைய வேண்டிய வருங்கால வீரர்களாகிய நாம் வர்ணித்தற்கரிய அருமையான காலத்தைச் சிறிதும் உபயோகமற்ற வகையில் உபயோகிக்காமல், பிரயோஜனமுறும் முறையில் முயன்று கழிக்க, ஆண்டவனிடம் அருள் சுரக்குமாறு ஆராதிப்போமாக.

* * *

வெள்ளைக் கொக்கு

D. R. Nayak

வெள்ளைக் கொக்கு யாவராலும் விரும்பப் படத்தக்கது. டென்மார்க், ஜெர்மனி முதலிய இடங்களில் அதைப் பாதுகாத்து வருகின்றனர். உலாந்து தேசத்தில் அணைக்குச் சேதம் விளைவிக்கும் பிராணிகளை இக் கொக்கு அழித்து விடுவதால் அத் தேசத்தார் இதற்கு விசேஷித்த பாது காப் பளிக்கின்றனர்.

கொக்கு கூடு கட்டி வாழும்படி வைக்கப் படும். அதில் ஒரு தடவை குடியிருக்கும் கொக்குக் குடும்பம் தலை முறை தத்துவமாய் அதே இடத்தில் இருந்து வாழும். வருஷா வருஷம் அக் கூடு விருத்தி யடைந்து உயரமாய் கட்டப்படும். அது குச்சிகளாலேயே அமைக்கப் பட்ட கூடு.



கொக்குக் கூட்டம் ஆடும் ஆட்டம்.

அநேக நாடுகளில் இது கௌரவ விருந்தாளியாக வீடுகளில் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. எந்த வீட்டில் இது கூடு கட்டுகின்றதோ அந்த வீடு பாக்கிய முள்ளது என்று எண்ணப்படும். உலாந்து தேசத்தில் உன்னத ஸ்தானத்தில் வண்டிச் சக்கரங்கள்

மொரோக்காவிலுள்ள ஒவ்வொரு வீட்டின் மேலும் கொக்குக் கூட்டின காட்சி காணலாம். பெரிய பட்டணங்களில் கொக்கு வைத்திய சாலை ஒன்று உண்டு. காயப் பட்ட கொக்குகள் அங்கு சிகிட்சைக்காக அனுப்பப் படுகின்றன. மூர் ஜாதியாருக்கு அது ஒரு

தெய்வப் பறவை. தூய்மை வாய்ந்தது என்ற எண்ண முண்டு. பொதுவாக அது கட்டடங்களின் மேலும் மரங்களின் மேலும் கூடு கட்டும்.

வருஷந்தோறும் தாய் தந்தைப் பறவைகள் தம் தம் கூடுகளுக்கே திரும்பி வரும். அவவாறு வராவிட்டால் சகலருக்கும் கவலை ஏற்படும். பிந்தி வரும் வரை மற்ற கொக்குகள் எதிர் பார்த்துக் கொண்டே இருக்குமாம். வந்து விட்டால் ஊரெங்கும் பெரிய ஆரவாரமிருக்குமாம்.



வெள்ளைக் கொக்கு வெகு அழகாயிருக்கும். சிறகிலும் வாலிலும் நீண்ட கருப்பு இறகுகளுள. மற்ற பாகம் பஞ்சைப்போல் வெண்மையாயிருக்கும். அலகும் காலும் செந்நிறமாயிருக்கும். அது நிற்கும்போது மூன்றடி உயரம். தவளையும் பூச்சி புழுக்களும் அதற்காகாரம். சாதாரணமாய் அமைதியான பறவை அது.

முட்டையிடுங் காலத்தில் பெட்டைக் கொக்குகள் செட்டை விரித்து ஆட்டம் ஆடும். கொக்குக்குத் தன் குஞ்சுகள் மேலும் குடும்பத்தின் மேலும் பட்சம் அதிகம். ஒரு பெட்டைக் கொக்கு ஒரே ஓர் ஆண் கொக்குடன் தான் தன் ஜீவ காலத்தைக் கழிக்கும். அதற்கே உண்மையாயிருக்கும். தன் இரைப் பையிலுள்ள பாதி ஜீரணமான ஆகாரத்தைக் குஞ்சுகளுக்கு ஊட்டும். தன் அலகை விரி வாய்த் திறக்கும் குஞ்சுகளின் வாயில் விட்டு ஆகாரம் போஷிக்கும்.

"ஓடு மீன் ஓடி

ஒரு மீன் வருமளவும்

வாடி யிருக்குமாம் கொக்கு"

கோடை காலத்தில் கொக்கு ஐரோப்பாவிலும், துருக்கியிலும், பாரசீகத்திலும், மத்திய ஆசியாவிலும் காணப்படும். இத்தேசங்களில் அது பலுகிப் பெருகுகின்றது. பனி காலத்தில் இவைகள் கூட்டங் கூட்டமாய் வெளி கிளம்புகின்றன. மத்திய ஆசியா மேற்கு ஆசியாவிலுள்ளவை இந்தியாவுக்கும் ஐரோப்பாவிலுள்ளவை நன்னம்பிக்கை முனை வரை ஆப்பிரிக்காவுக்கும் செல்லுகின்றன. எகிப்தில் நைல் நதிப் பிரதேசங்களில் அநேகக் கொக்குகள் தங்கி விடுகின்றன. அங்கு ஏராளமான தவளைகளும் பூச்சிகளும் ஊரும் பிராணிகளுங் கிடைக்கும்.

சவுக்கு மரக் கதை

R. M. Nirmal

முன்னொரு காலத்தில் ஒரு சவுக்கு மரமிருந்தது. அது ஒரு காட்டில் பல மரங்கள் மத்தியில் வளர்ந்து வந்தது. அதற்கு நீண்ட ஊசி போன்ற இலைகளுண்டு. அந்த மரம் ஒரு நாள் "இந்த இலைகள் எனக்கு வேண்டாம். பொன்னாற் செய்த அழகான இலைகள் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டது. சூரியன் அஸ்த்மித்தது இருள் மூடிற்று. இம்மரமும் நித்திரை செய்தது. அந்நேரம் மரங்களின் ரூபி அக் காட்டில் உலாவிச் சென்றது. கிழக்கு வெளுத்தபோது, சேவல் கூவினபோது, சூரியன் உதித்தபோது, இந்தச் சவுக்கு மரத்துக்குப் பொன்னாற் செய்த அழகான இலைகள் கொடுக்கப் பட்டிருந்தது மரததுக்கு அதிக சந்தோஷம். "என்ன அழகாயிருக்கின்றேன்! என்ன பிரகாசம்! இனி எப்போதும் சந்தோஷமாயிருப்பேன்" என்று மரம் எண்ணிற்று.

அன்றிரவே ஒரு திருடன் வந்து அதிலுள்ள எல்லாத் தங்கத் தகடுகளையும் எடுத்துக் கொண்டுபோய் விட்டனன். அடுத்த நாள் காலையில் மரம் மொட்டையாய் நின்றது. ஐயோ, மிகப் பரிதாபமான காட்சி!

"ஐயையோ நான் என்ன செய்வேன்? திருடன் திருடிக்கொண்டு போய் விட்டானே! இனி எனக்குப் பொன்னாற் செய்த இலைகள் வேண்டாம். அழகான வளையல்கள் போன்ற பல வர்ணக் கண்ணாடி இலைகள் கிடைத்தால் போதும் அவைகளைத் திருடர் விரும்பார். நானும் அழகாய்த் தோன்றுவேன்', என்று அம் மரம் சொன்னது.

அன்றிரவும் மரங்களின் ரூபி அங்கு உலாவிற்று. கிழக்கு வெளுத்தபோது, சேவல் கூவினபோது, சூரியன் உதித்தபோது மரமெல்லாம் வர்ணக் கண்ணாடி மயமாகவே இருந்தது. அது பளபள வென்று பிரகாசித்தது. அதில் சலசல வென்றும் சத்தங் கேட்டது.

"என்ன அழகு! எவ்வளவு நேர்த்தி! எனது சந்தோஷம் இனி என்றும் மாறாது" என எண்ணினது அச் சவுக்கு மரம்.



சவுக்கு மரம்

அன்றிரவு ஒரு பெருங் காற்றடித்தது. கண்ணாடி இலைகள் ஒன்றோடொன்று மோதி சின்னா பின்னமாய் உடைந்து தரையிலே சிதறிக் கிடந்தன. மரம் மொட்டையாய் நின்றது.

மறுநாள் காலையில் அந்த மரத்துக்கு அதிக விசனம் உண்டாயிற்று.

“நான் அறிவு கெட்ட மரம். மிகவும் பெருமை பாராட்டினேன். மோசத்துக்குள்ளானேன். மற்ற மரங்களைவிட அழகாயிருக்க வேண்டுமென்று விரும்பேன். எனக்கு அவைகளைப் போல பெரிய நீண்ட பச்சை இலைகள் இருந்தால் போதும்” என்று எண்ணினது. அந்நாள் இரவிலே மரங்களின் ரூபி அங்கு உலாவினது. கிழக்கு வெளுக்கும் போது, சேவல் கூவினபோது, சூரியன் உதித்தபோது மரத்துக்கு பெரிய, நீண்ட பச்சை இலைகள் கிடைத்தன. நடந்தது என்ன? ஆடுகள் வந்து பச்சை இலைகளையெல்லாம் தின்றன. ஆட்டிடையனும் அவைகளுக்கு எட்டாத இலைகளையெல்லாம் தன் வளை தடியினால் இழுத்துப் பறித்துத் தன் ஆடுகளைப் போஷித்தனன். மரம் மறுபடியும் மொட்டையாயிற்று.

“இனி என்ன செய்யப் போகின்றேன். பொன்னாற் செய்த இலைகளைத் திருடன் கொண்டு போனான். கண்ணாடி இலைகளைக் காற்று அடித்து உடைத்தது. பச்சை இலைகளோ ஆட்டுக்கிரையாயின. எனக்கு அந்தப் பழைய ஊசி போன்ற இலைகளே உசிதமானது. அவைகளே வேண்டும் இனி அவைகளே போதும் என்ற மன திருப்தியோடே இருப்பேன்” என்று அந்தச் சவுக்கு மரம் சொல்லிற்று.

மரங்களின் ரூபி இதைக் கேட்டுக் கொண்டிருந்தபடியால் மறுநாள் அம் மரத்துக்குரிய பழைய ஊசி போன்ற இலைகள் கிடைத்தன. குருவிகள் பழையபடி அதில் வந்து கூடு கட்டித் தங்கின. எனினும் இப்போது தான் அம் மரத்துக்கும் குருவிகளுக்கும் புதிய சிநேகம் உண்டானது. அந்தச்சவுக்கு மரம் குருவிகளைப் பார்த்து,

“என்னிடத்தில் வாருங்கள். கூடு கட்டி வாழுங்கள். என் ஊசி இலைகளால் உங்கள் கூட்டை மறைத்து உங்கள் முட்டைகளைக் காப்பாற்றுவேன். குளிர் காலத்தில் அனல் கொடுப்பேன்” என்று வாக்களித்தது.

பொன் இலைகளும், கண்ணாடி இலைகளும்; பெரிய பச்சை இலைகளும் அழகாயிருக்கலாம். ஆயினும் சவுக்கு மரம் தனக்கு ஊசி இலையினும் சிறந்த இலை வேறு கிடையாது என்ற பாடம் கற்றுக் கொண்டது ஆச்சரிய மல்ல.

——(o)——

படம் வரைதல்,



சித்திரப் பூத் தையல் மாதிரிப் படம்

நான் செய்த நவ வருடத் தீர்மானங்கள்

S. M. Pethe

1. செய்யக் கூடிய தீர்மானம் செய்து அதை நிறைவேற்றுவேன்.
2. என் காலத்தை ஆகாயப்படுத்துவேன். இதுவரை வீணாக்கினதற்காக விசனப்படுகின்றேன்.
3. எதற்கும் பிந்திப்போக மாட்டேன்.
4. முந்தித் தூங்கப் போய், முந்தி எழுந்து, தண்ணீரில் ஸ்நானம் செய்வேன் இளைப்பாறிய பின் பாடம் படிப்பேன். மாலை மயங்கும் வேளை விளையாடவோ உலாவவோ போவேன். ஒவ்வொரு நாளும் பத்திரிகை வாசிப்பேன்.
5. முறுமுறுக்காமல் என் அன்னைக்கு உதவி செய்வேன். என் தந்தையை மறவேன் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' எனக் கொள்வேன்.
6. ஒவ்வொரு நாளும் ஏதாகிலும் ஒரு தர்ம காரியம் செய்வேன். படுக்கப் போகுமுன் இது விஷயமாய் சுய ஆராய்ச்சி செய்வேன்.
7. அயலாருக்கும் நண்பருக்கும் உதவி செய்வேன். "மனுஷர் உங்களுக்கு எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீாகளோ அதையே அவர்களுக்குச் செய்யுங்கள்" என்னும் வார்த்தைகளை மறவேன். அவர்கள் செய்த நன்றியும் மறவேன்.
8. கடன்படமாட்டேன். வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்யேன்.
9. என் மார்க்கப் போதனைகளைக் கைக்கொள்வேன். தினந்தோறும் வேதம் வாசிப்பேன். தியானம் செய்வேன். பிறர் மதங்களைப் பகைக்கமாட்டேன்.
10. *சமுதாய ஊழியஞ் செய்வேன். விடுமுறை நாட்களில் கிராமவாசிகளுடன் பழகிப் படிப்பிப்பேன். சுத்த முறைகளை நித்தம் போதிப்பேன் சாதிப்பேன்.
11. என் படுக்கைக்குப் பக்கமாய் இத் தீர்மானங்களை எழுதிச் சுவரில் மாட்டி ஒவ்வொரு இரவிலும் வாசித்து சோதித்துப் பார்ப்பேன்.





இவர்கள்

யாவர்

இன்னோ ராண்டு மாயிற்றே

Tune - Monkland

1

இன்ப துன்ப லோகத்தில்
அன்றன் றுள்ள வெற்றியின்
சின்னத்தோடு சென்ற நல்
இன்னோ ராண்டு மாயிற்றே!

2

இன்ன வழி திறக்கும்
என்றறிய மாட்டோமே
ஒன்றும் தெரிவிக்காமல்
இன்னோ ராண்டு மாயிற்றே!

3

அன்று மின்று மென்றும் போல்
ஒன்றும் நஷ்ட மின்றியே
நன்றாய்க் கடமை செய்யும்
இன்னோ ராண்டு மாயிற்றே!

4

மன்னர் மன்னன் சமுகம்
முன்னும் பின்னும் செல்லுமே
பின்ன மென்ன நேரிடும் ?
இன்னோ ராண்டு மாயிற்றே!

——(o)——

சிறு கதை

(S. ஷாந்தி 3ம் பாரம்)

The Union High School, Coimbatore.

தந்தை தன் எட்டு வயது மகனுடன் புகை வண்டியில் பிரயாணம் செய்தார். பையன் வண்டியின் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது தகப்பனார் அவனுக்கு வேடிக்கை காட்ட எண்ணி அவன் தலையிலுள்ள புது தொப்பியை எடுத்து மறைத்து வைத்து விட்டார். பையன் தொப்பி கீழே விழுந்து விட்டது என்று நினைத்து அழுதான். அப்பொழுது அவன் தகப்பனார், "இதோ பார்! தொப்பியை வரவழைக்கிறேன்," என்று சொல்லி ஒரு சீழ்க்கை அடித்துத் தொப்பியை எடுத்து அவன் தலையில் வைத்தார். பையன் ஆச்சரிய மடைந்து தன் தலையி லிருந்த தொப்பியை ஜன்னல் வழியாய் வீசி எறிந்து விட்டு, "அப்பா! அப்பா!! மறுபடியும் சீழ்க்கை அடித்து என் தொப்பியை வரவழை," என்று சொன்னான். வண்டியில் உள்ள எல்லோரும் நகைத்தார்கள்.

——(o)——



சென்னை

[illegible]ஜ் மஹால்



“வி” என்னும்

வெற்றியின் சின்னம்

Registered No. M 3804.

கோதாவரி ஸ்நானம்

Printed by S. T. Rhenius, at the N.M.S. Press. 48-c, Peters Road, Royapettah, Madras,
Edited by Rev. T. A. Fenn, London Mission Church, Coimbatore and
Published by M. Davamoni at Royapettah P.O., Madras.